## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – மார்ச் – 2025

## தமிழ் விடைக்குறிப்புகள்

**விடைத்தாள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்ற வேண்டும்.**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்ப்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இன்றி இருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண்கள் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக் (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடை இருப்பின் ‘‘மிகை’’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ‘‘மீண்டும்’’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

**பகுதி – 1** **மொத்த மதிப்பெண்கள் – 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **14 x 1 = 14**

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண் |
|---|---|---|
| 1 | அ ) தொல்காப்பியம் | 1 |
| 2 | அ ) மறைமலை அடிகள் | 1 |
| 3 | அ ) தொல்காப்பியம் | 1 |
| 4 | ஆ ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது | 1 |
| 5 | ஈ ) ( 1 ) – ( iii ) , ( 2 ) – ( iv ) , ( 3 ) – ( i ) , ( 4 ) – ( ii ) | 1 |
| 6 | இ ) தந்தைவழிச் சமூகமுறை | 1 |
| 7 | அ ) இசைக்கருவி | 1 |
| 8 | ஈ ) வினைப்படிமம் | 1 |
| 9 | ஈ ) மழை | 1 |
| 10 | ஆ ) கரந்துவரல் திரை | 1 |
| 11 | இ ) மகிழ்ச்சி | 1 |
| 12 | ஈ ) காண்டம் | 1 |
| 13 | ஈ ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர் ! | 1 |
| 14 | ஆ) பாடாண் திணை | 1 |

## பகுதி –II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** **3 × 2 = 6**

| | | |
|---|---|---|
| | **( இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் )** | |
| 15 | வாடைக்காலத்தில் விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு வருந்தின ?<br>விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.<br>பறவைகள் மரங்களில் இருந்து நிலத்தில் வீழ்ந்தன. | 1<br>1 |
| 16 | செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை ?<br>ஒருவருடைய செல்வம் குறையாமல் இருக்க வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருக்க வேண்டும் .<br>(இவ்வினாவிற்கு பொருத்தமான குறள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 2 |
| 17 | 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' –விளக்கம் தருக .<br>மழைக் காலத்தில் சூரியனின் திடீர்ப் பயணத்தால் வெண்ணிற ஒளி எங்கும் பரவி ஒளிரத் தொடங்கியது .<br>நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாக மாறியது. | 1<br>1 |
| 18 | "உவா உற வந்து கூடும்<br>உடுபதி, இரவி ஒத்தார்'' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக .<br>இடம் : இக்கூற்று ' கம்பர் ' இயற்றிய கம்பராமாயணத்தில் உள்ளது<br>உடுபதி – சந்திரன் (சுக்ரீவன்), இரவி – சூரியன் (இராமன்)<br>பொருள் : இராமனும் வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள். | 1<br>1 |

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** **2 × 2 = 4**

| | | |
|---|---|---|
| 19 | ''ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்'' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய் ?<br>மழையைப் பெற மரம் வளர்க்க வேண்டும் .<br>மண்ணரிப்பைத் தடுக்க மரம் வளர்க்க வேண்டும் .<br>பூமியின் பசுமையைப் பாதுகாக்க ஒவ்வொரு மனிதரும் பங்கெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவேன்.<br>( பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | 2 |
| 20 | பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக .<br>சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய காலத்தில் விதைத்தால் வேளாண்மை செழிக்கும்,<br>அதுபோல, எந்தச் செயலையும் அதற்குரிய காலம், இடம் அறிந்து செய்தால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும். | 1<br>1 |
| 21 | ' சேய்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன ?<br>பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இருபக்கங்களிலும் பார்க்கிறோம், அப்போது நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவு செய்கின்றன. திரைப்படத்தில் இதனைச் சேய்மைக் காட்சித்துணிப்பு ( LONG SHOT ) எனலாம் . | 2 |

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக .** **7 × 2 =14**

| | | |
|---|---|---|
| **22** | முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் –இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.<br>புத்தகத்தைப் படித்து முடித்தால் தரலாம்<br><br>அந்தப் புத்தகத்தை உன்னால் முடிந்தால் தரலாம்<br>( பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | **1**<br><br>**1** |
| **23** | உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக .<br>கிணற்றுத் தவளை போல :<br>‘ நான் மட்டுமே அறிவாளி ‘ என்று கூறுபவர் , உலகம் தெரியாத கிணற்றுத் தவளை போன்றவர் .<br>( பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | **2** |
| **24** | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக .<br>மணம் , மனம் :<br>மல்லிகையின் மணம் மனதைக் கவர்ந்தது<br>( பொருத்தமான வேறு விடையிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம் ) | **2** |
| **25** | திருவளர்ச்செல்வன் , திருவளர்செல்வன் –இவற்றில் சரியான தொடர் எது ? அதற்கான இலக்கண விதி யாது ?<br>சரியான தொடர் : திருவளர்செல்வன்<br>இலக்கண விதி : வினைத்தொகையில் வல்லினம் மிகாது | **1**<br>**1** |
| **26** | பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களை ஆக்குக .<br>1 . காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும் .<br>2 . சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்தால் வாழ்வில் உயரலாம் | **1**<br>**1** |
| **27** | ஏதேனும் ஒரு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க .<br>அ ) வெங்காயம் – வெம் + காயம்<br>1 . வெங்காயம் ஒரு கிலோ இருபது ரூபாய் .<br>2 . நெருப்பில் தவறி விழுந்ததால் வெம் காயம் ஏற்பட்டது .<br><br>ஆ ) அந்தமான் – அந்த + மான்<br>1 . அந்தமான் தீவிற்கு மக்கள் அதிகமாகச் சுற்றுலா செல்கின்றனர்<br>2 . அந்த மானைக் காட்டில் பார்த்தேன் .<br><br>( பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | **1**<br>**1**<br><br>**1**<br>**1** |
| **28** | கலைச்சொல்லாக்கம் தருக .<br>அ ) Artist – கவின் கலைஞர்<br>ஆ ) Subscription – உறுப்பினர் கட்டணம் | **1**<br>**1** |
| | **செவி மாற்றுத்திறனாளர்களுக்கு மாற்று வினா**<br>பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக .<br>வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கு இழுத்துக் / அழைத்துக் கொண்டு போனார் ? | **2** |
| **29** | ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக .<br>அ ) அருங்கானம் – அருமை + கானம்<br>விதி 1 –“ ஈறுபோதல் ”<br>விதி 2 –“ இனமிகல் ” | **1**<br>**1** |

| | | |
|---|---|---|
| | ஆ ) ஏழையென – ஏழை + என<br>விதி 1 –“ இஈ ஐ வழி யவ்வும்”<br>விதி 2 –“ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ”<br><br>**குறிப்பு :** சரியாகப் பிரித்து எழுதியிருப்பின் ஒரு மதிப்பெண்<br>சரியான விதி எழுதியிருப்பின் ஒரு மதிப்பெண் | <br>**1**<br>**1** |
| **30** | ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் விதி தருக .<br>அ ) சாற்றி – சாற்று + இ<br>சாற்று – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி<br><br>ஆ ) தொழுதனர் – தொழு + த் + அன் + அர்<br>தொழு – பகுதி<br>த் – இறந்தகால இடைநிலை<br>அன் – சாரியை<br>அர் – பலர்பால் வினைமுற்று விகுதி | <br>**1**<br><br>**1**<br><br><br><br>**1**<br><br>**1** |

**பகுதி –III**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4 = 8**

| | | |
|---|---|---|
| **31** | ‘ நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து<br>உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் ‘ **–** இக்கவிதையின் அடி ,<br>‘ தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே ‘ என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக .<br><br>மழைக்காலம் முடிந்தவுடன் கோடைகாலம் தொடங்குகிறது .<br>மழைக்காலத்தில் நீர்நிலைகள் நிறைந்திருக்கும்<br>மழைமேகம் விலகி சூரியன் வரும்போது அந்நீர்நிலையிலிருந்து தன் உதடுகளைக் குவித்து உறிஞ்சுவது போல, சூரியன் நீரை ஆவியாகத் தொடங்கிவிடும் என்கிறது கவிதையின் அடி .<br>அதுபோல, காலையில் இலைகளில் காணப்படும் பனித்துளிகள் சூரிய ஒளி பட்டவுடன் மறைந்துவிடும் என்கிறது நாட்டுப்புறப்பாடல் .<br>காலையில் பனித்துளியை உறியத்தொடங்கும் சூரியனின் ஒளிக்கதிர்கள் பிறகு நீர்நிலைகளிலிருந்து நீரை உறிஞ்சுகிறது .<br>எனவே, நாட்டுப்பறப்பாடலின் தொடர்ச்சியாகவே இக்கவிதையின் அடிகள் அமைகிறது .<br>( பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | **4** |

| | | |
|---|---|---|
| **32** | குகனோடு ஐவராகி , வீடணனொடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக .<br>குகனுடைய நட்புக்கிடைத்த பிறகு, நால்வராக இருந்த நாங்கள் ஐவராக ஆனோம்.<br>மேருமலையைச் சுற்றிவரும் கதிரவனின் மகனான சுக்ரீவனின் நட்புக் கிடைத்தபின் உடன் பிறந்தோர் அறுவர் ஆனோம்.<br>உள்ளத்தில் அன்பு கொண்டு எங்களிடம் வந்த அன்பனே உன்னுடன் சேர்ந்து எழுவர் ஆனோம்.<br>என்னைக்காட்டிற்கு அனுப்பிய உன் தந்தை தசரதன், இதனால் கூடுதல் புதல்வர்களைப் பெற்று பெருமை அடைகிறான் என்று இராமன் வீடணனிடம் மனம் நெகிழ்ந்து கூறினான். | **4** |
| **33** | சிரிப்பு , சினம் , வியப்பு , அச்சம் ஆகியவற்றுள் எவையேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க .<br>அச்சம் :<br>**<u>நகை (சிரிப்பு)</u>**<br>நந்திக்கலம்பகத்தில் பாடிய பாணனின் குரலை எள்ளி நகையாடிய தலைவியின் கூற்று<br>புகழ்மிக்க தலைவனின் புகழ்பாடுவோனே, நீ எங்கள் வீட்டின்முன் இரவு முழுவதும் பாடினாய். அதைக்கேட்டு என்தாய், விடியவிடியக் காட்டில் அழும் பேய் என்றாள். பிறர், நரி ஊளையிட்டது என்றனர். தோழியோ, நாய் குரைத்தது என்றாள். இல்லை நீ என்றேன் நான்.<br>**<u>சினம்</u>**<br>தன்னை இளையவன் என்று எள்ளிய பகை வேந்தர் மீது பாண்டியன் நெடுஞ்செழியன் சினம் கொண்டு வஞ்சினம் கூறுதல்.<br>தன்னை சிறு சொல் சொல்லிய சினம்மிக்க வேந்தரை வென்று அவர்கள் சிதறி ஓடுமாறு போரிட்டு அவர்களது முரசையும் ஒருங்கே கைப்பற்றுவேன் என்று நெடுஞ்செழியன் புறநானூற்றுப் பாடலில் சினந்து கூறியது.<br>**<u>மருட்கை (வியப்பு)</u>**<br>கண்ணகி வானூர்தியில் வானுலகு சென்ற காட்சியைக் கண்ட குன்றவர்கள் வியந்து இந்திரன் கோவலனோடு வந்து பத்தினியாகிய கண்ணகியை, விண்ணுலகு அழைத்துச் சென்ற வியப்பான காட்சியை நாங்கள் பார்த்தோம் என சிலப்பதிகாரத்தில் கூறிய நிகழ்வு.<br>**<u>அச்சம்</u>**<br>யானை சினந்து வர மகளிர் நடுங்கி அஞ்சினர். மதம் பிடித்த யானை மரங்களை முறித்தது. கார்கால மேகம் இடிப்பது போல முழங்கியது. உயிர் பிழைப்பதற்கு வேறு இடம் காணவியலாமல் மன நடுக்கம் அடைந்தோம். உயிரினும் சிறந்த நாணத்தைக் காக்க மறந்தோம். வளையல்கள் ஒலிக்க விரைந்து ஓடிச்சென்று அவனைச் சேர்ந்து மயில் போல் நடுங்கி நின்றோம் என்ற குறிஞ்சிப்பாட்டு நிகழ்வு.<br>(எவையேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையை எழுதினால் போதும்.)<br>குறிப்பு – இவை போன்ற மெய்ப்பாடுகளை விளக்கும் நிகழ்வுகளை எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம். | **4** |

| | | |
|---|---|---|
| 34 | ‘ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்‘ – இடஞ்சுட்டிப் பொருள்விளக்குக .<br>இடம் : எச் . ஏ . கிருட்டிணனார் இயற்றிய இரட்சணிய யாத்திரிகத்தில் இடம்பெற்றுள்ளது .<br>பொருள் : இறைமகன் ஓர் ஏழையைப் போல அமைதியாக நின்றார் . இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் .<br>விளக்கம் : இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார் . தமக்கு இழிவான செயல்களைச் செய்த அம்மனிதர்கள் பெறப்போகும் துன்பத்துக்காக இரக்கப்படும் ஓர் ஏழையைப் போல அமைதியாக நின்றார் . இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் என்று கிருட்டிணனார் கூறுகிறார் . | 1<br>1<br>2 |

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக . 2 × 4 = 8**

| | | |
|---|---|---|
| 35 | மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.<br>மழைக்காலத்தில் முக்கியமான பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் .<br>மின்இணைப்பு , எரிவாயுஇணைப்பைத் துண்டிக்க வேண்டும் .<br>அத்தியாவசியப் பொருட்களைச் சேமித்து வைத்தல் வேண்டும் .<br>துணிகள், மருந்துகள், கொசுவலை, போன்றவற்றை வைத்துக்கொள்ள வேண்டும்.<br>(பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | 4 |
| 36 | தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை ?<br>நான் வீட்டுப்பாடங்களைச் செய்வதோடு என்தம்பி, என் தங்கையர்களின் வீட்டுப்பாடங்கள் செய்வதற்கு உறுதுணையாக இருப்பேன் .<br>எனது உடைகளை நானே துவைத்துக் கொள்வேன் .<br>நான் சாப்பிட்டுப் பயன்படுத்தும் தட்டு முதலான பொருட்களை நானே கழுவிச் சுத்தம் செய்வேன் .<br>வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்பதில் அம்மாவுக்கு உதவி செய்வேன் .<br>( பொருத்தமான வேறு விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம் ) | 4 |
| 37 | சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் கல்வி நிறுவனங்கள் குறித்து எழுதுக<br>1715 இல் உருவான ‘ புனித மேரி ‘ தேவாலய தர்மப்பள்ளி<br>1812 இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி<br>1837 இல் தொடங்கப்பட்ட கிறித்துவக் கல்லூரி<br>1840 இல் உருவான பிரசிடென்சி பள்ளி ( மாநிலக் கல்லூரி )<br>1857 ஆம் உருவாக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம்<br>1914 இல் பெண்களுக்காகத் தொடக்கப்பட்ட இராணிமேரி கல்லூரி<br>இதே போன்று பச்சையப்பன் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக் கூடங்கள் | 4 |

| | | |
|---|---|---|
| | பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின.<br>(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| 38 | மயிலை சீனி . வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழ்க்குச் செய்திகள் உருவாக்கித் தருக .<br>மயிலை சீனி வேங்கடசாமி **16.12.1900** ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.<br>தந்தை சீனிவாசன் சித்த மருத்துவராகவும், தமையன் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியதால் " தனது தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம் " என்கிறார்.<br>ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.<br>இவரது ஆய்வுக்கட்டுரைகள் குடியரசு , ஊழியன் செந்தமிழ்ச் செல்வி , ஆரம்பாசிரியன் , லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளிவந்தன.<br>கிறித்துவமும் தமிழும் என்பது இவர் இயற்றிய முதல் நூலாகும்.<br>வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ்பிராமி ஆகியவற்றில் புலமை பெற்றவர்.<br>கலைகள், சிற்பம் , ஓவியம் தொடர்பான ஆய்வுகள் தமிழ்ச்சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன.<br>(எவையேனும் ஏற்புடைய நான்கு விடைகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |

**பிரிவு – 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3× 4 = 12**

| | | |
|---|---|---|
| 39 | அ ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக .<br>**அணி இலக்கணம்:**<br>இரு வேறு பொருட்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பிறகு வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும். | 2 |
| | **சான்று :**<br>**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் ............** எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடல். | 1 |
| | **பொருத்தம் :**<br>தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி, அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று.<br>**( அல்லது )** | 1 |
| | ஆ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்<br>திண்ணியர் ஆகப் பெறின்.<br>இக்குறட்பாவில் பயின்று வரும் அணி **சொற்பொருள் பின்வரு நிலையணி** ஆகும் . | 1 |
| | **அணி இலக்கணம் :**<br>செய்யுளில் , ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து , அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலை அணி . | 2 |
| | **பொருத்தம் :** | |

| | | |
|---|---|---|
| | இக்குறட்பாவில் ' எண்ணிய ' என்ற சொல் பல முறை வந்து 'நினைத்த ' என்ற ஒரே பொருளைத் தருவதால் , இக்குறட்பா சொற்பொருள் பின்வருநிலை அணிக்குப் பொருத்தமாயிற்று . | **1** |
| **40** | இலக்கிய நயம் பாராட்டுக .<br>மையக்கருத்து<br>ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்று<br>தொடைநயம்<br>சொல் நயம்<br>அணி நயம்<br>சந்த நயம்<br>சுவை நயம் | **1**<br><br>**3** |
| **41** | அ ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக .<br>**திணை விளக்கம் :** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள், போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது .<br>**சான்று :** ''வாயிலோயே வாயிலோயே…….'' (அறிவும் புகழும்) எனத் தொடங்கும் ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல்<br>**பொருத்தம் :** இப்பாடல் அதியமானின் கொடைத்திறனைச் சிறப்பித்துக் கூறுகிறது . எனவே, பாடாண்திணைக்குப் பொருந்தி வருகிறது.<br>(''காய்நெல் அறுத்து எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்'' )<br>**( அல்லது )**<br>ஆ ) கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக .<br>**துறை விளக்கம் :**<br>கூதிர்ப்பாசறை என்பது போர்மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீடு.<br>**சான்று :**<br>''வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்'' எனத் தொடங்கும் நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை என்னும் பாடல்<br>**பொருத்தம் :**<br>குளிர் காலத்தில் பாண்டிய நெடுஞ்செழியன் தன் போர் வீரர்களுடன் பாசறையில் தங்கியதால், இப்பாடல் கூதிர்ப் பாசறைத் துறைக்குப் பொருந்தி வருகிறது. | **2**<br>**1**<br>**1**<br><br><br>**2**<br>**1**<br>**1** |
| **42** | பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக .<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வு (கதை)<br>(பொருத்தமான வாழ்க்கை நிகழ்வினை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் . வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண்கள் வழங்கலாம் ) | **1**<br>**3** |

| | | |
|---|---|---|
| 43 | கீழ்க்காணும் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க .<br>1 . ‘ நீயே புருஷ மேரு ‘ என்ற பாடலை இயற்றியவர் யார் ?<br>**கோபால கிருஷ்ண பாரதியார்.** | 1 |
| | 2 . பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?<br>**தாது வருடப்பஞ்சம்.** | 1 |
| | 3 . தமிழின் முதல் நாவல் எது ?<br>**பிரதாப முதலியார் சரித்திரம்.** | 1 |
| | 4 . ‘ தானம் அளித்தார் ‘ என்ற தொடருக்கு நிகராகப் பத்தியில் உள்ள தொடரை எழுதுக ?<br>**கொடையளித்தார்.** | 1 |

## பகுதி –IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக .** **3 ×6 = 18**

| | | |
|---|---|---|
| 44 | அ ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக .<br>**அ) முன்னுரை**<br>தமிழ்மொழி நம் அடையாளம், பண்பாட்டின் நீட்சி.<br>தோன்றிய காலம் முதல் இன்றளவும் இளமையோடும் உயிர்ப்போடும் இருப்பது.<br>இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழின் திறம் வியந்த கவிஞர் சிற்பி பாடுவனவற்றைக் காண்போம்.<br>**செந்தமிழே துணை**<br>மாலை நேரத்தில் சிவந்த நிறமுடைய சூரியன் மலைகளுக்குப் பின்னால் மறையும்.<br>இக்காட்சி வானமெல்லாம் சிவப்பு நிறப்பூக்கள் பரவிக்கிடப்பது போல காணப்படுகிறது.<br>உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் அந்தி வானைப்போல சிவந்து இருக்கிறது.<br>உழைப்பின் மிகுதியால் அவர்களின் தோள் மீது வியர்வைத் துளிகள் முத்து முத்தாய்த் தோன்றுகிறது.<br>இவற்றை வியந்து பாட செந்தமிழைத்தவிர வேறு துணை உண்டோ! என்று பாடுகிறார்.<br>**பொதிகைத் தென்தமிழ்**<br>பெருகி வரும் கவிதை எண்ணத்திற்கு உணவாய் இருப்பது தமிழ்.<br>பாண்டியரின் சங்கத்தில் கொலுவாக இருந்ததும் பாரி முதலான வள்ளல்களைத் தந்ததும் தமிழே!<br>மீண்டும் அந்தப் பழமையைப் புதுப்பித்து மெய் சிலிர்க்க வைத்த தமிழ்க்குயிலே என்றும்,<br>கூண்டை உடைத்தெழுந்த சிங்கம் போல குளிர்ந்த பொதிகையில் தோன்றிய தமிழே! என்றும் பாடுகிறார் கவிஞர். | 6 |

| | | |
|---|---|---|
| | முடிவுரை<br>காலத்திற்கு ஏற்றவாறு தம்மைப் புதுப்பித்துக்கொண்டு இன்றும் சிறப்போடு திகழ்கின்ற தமிழின் திறத்தைக் கவிஞர் வியந்து பாடுகிறார்.<br>(எவையேனும் ஆறு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | |
| ( அல்லது ) | | |
| | ஆ ) செய்ந்நன்றி அறிதல் :<br>**முன்னுரை :**<br>உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது திருக்குறள் . இதனை வாழ்க்கை சூத்திரங்கள் என்றே கூறலாம் . மனிதர்களின் பல்வேறு பிரச்சனைகளுக்கும் தீர்வளிக்கவல்லது திருக்குறள் . அப்படிப்பட்ட பெருமையுடைய திருக்குறளில் ‘செய்ந்நன்றியறிதல்’ அதிகாரம் கூறும் சில கருத்துகளை நாம் ஆராய்வோம்.<br>**கைமாறு கருதாத உதவி ;**<br>தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகமும் , விண்ணுலகமும் கைம்மாறாக் கொடுத்தாலும் ஈடாகாது .<br>**உலகத்தை விடப் பெரிய உதவி ;**<br>உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் , அது உலகத்தின் அளவைவிடப் பெரியதாகும்<br>**பயன் எதிர்பாராத உதவி ;**<br>பயனை ஆராய்ந்து பாராமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் சிறப்பை ஆராய்ந்து பார்க்கின் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும் .<br>**உதவியின் அளவு பனையளவு ;**<br>ஒருவன் மிகச்சிறிய நன்மை செய்தாலும் , அதன் பயனை அறிந்தவர் பெரியதாகக் கருதிப் போற்றுவர்.<br>**மறப்பதும் மறவாததும் ;**<br>ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லது அன்று ; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லது.<br>**உதவியை மறப்பது நன்றல்ல ;**<br>எந்த அறத்தை அழித்தவருக்கும் அப்பாவத்திலிருந்து மீண்டுவர வழியுண்டு . ஆனால் , ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு அப்பாவத்திலிருந்து மீள வழியே இல்லை.<br>**முடிவுரை :**<br>மற்றவர்களுக்காக வாழ்பவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் நிலைபெற்றிருக்கிறது. உதவி செய்து வாழ்வதே வாழ்க்கை. இந்த இரண்டு அறங்களையும் செய்ந்நன்றியறிதல் வாயிலாக, வள்ளுவர் விரிவாகக் கூறுகிறார். | **6** |
| **45** | அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.<br>அனுப்புநர்<br>பெறுநர்<br>பொருள்<br>கடிதத்தின் செய்திகள்<br>இடம், நாள்<br>உறைமேல் முகவரி<br>( இந்த அமைப்பு முறையில் இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம் ) | **1**<br>**1**<br>**1**<br>**3** |

( அல்லது )

ஆ ) நிருவாக மேலாண்மை குறித்து வெ . இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக .

**முன்னுரை**

மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் தொடங்கி விட்டது. தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்ற மேலாண்மையே ஒருவருக்கு அவசியமாகும். ஒருவர் எத்தொழிலைத் தொடங்கினாலும் திட்டமிடல், செயல்படுதல் ஆகிய நிருவாக முறைகள் சிறப்பாக அமைய வேண்டும்.

**நிருவாக மேலாண்மை**

உயர்பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால், யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒரு வகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றொரு அறிவாகும்.

நாலடியார் கூறுவது போலக் கல்லாதவராக இருந்தாலும், கற்றாருடன் சேர்ந்து பழகினால் நற்பண்புகள் நாளும் வளரும் நிருவாக மேலாண்மையும் சிறப்படையும்.

**நிதி மேலாண்மை** 6

நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத்தாண்டி செலவு செய்பவன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான். ஷேக்ஸ்பியர் நாடகத்தில் டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவனுக்கு வரவு குறைந்தாலும், செலவு அதிகரித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையயைப் பற்றி பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரித்தார்கள். இவ்வாறாக வரவைத்தாண்டிய செலவு செய்ததால் உதவியாளரின் பேச்சைத் தட்டிக் கழித்ததால் டைமன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் சென்று மனித இனத்தையே வெறுக்கிறான்.

**நல்வழி கூறும் மேலாண்மை**

தான் ஈட்டும் செல்வத்தை விட அதிகமாகச் செலவு செய்பவர்கள் ஒரு காலத்தில், தங்கள் மானத்தையும் அறிவையும் உணர்வையும் இழப்பார்கள். அவர்கள் எத்தகைய நிலையில் இருந்தாலும் திருடர்கள் போல நடத்தப்படுவார்கள். எத்தனை பிறப்பு பிறந்தாலும் எவ்வித மரியாதையும் கொடுக்காமல் தீயவர் போலவே நடத்தப்படுவார்கள். எனவே, வரவைத்தாண்டிய செலவு செய்வது தீமையையே விளைவிக்கும் என்பதை இஃது உணர்த்துகிறது.

**முடிவுரை**

நிருவாக மேலாண்மை என்பது நிருவகிக்கும் செயல்முறையோடு போய்விடுவதில்லை. இதில் ஒரு செயலில் ஒவ்வொரு அசைவுக்கும் உரிய நேரம் ஒதுக்க வேண்டும். அப்போதுதான் அச்செயல் சிறப்பாக நிறைவடையும். ஒவ்வொரு நாளும் புதிது என எண்ணிச் செயல்படுவதே சிறந்த மேலாண்மையாகும்.

| | | |
|---|---|---|
| **46** | அ) கோடைமழை கதைவாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக .<br>ஆசிரியர் – ‘சாந்தா தத்’<br>முன்னுரை<br>பெரியவர் ஆறுமுகத்திற்கும் குழந்தைக்குமான பாசப் பிணைப்பு<br>மருந்துக்கடை பாபுவின் மனிதநேயம்<br>பெரியவரின் மனமாற்றம்<br>தத்து எடுக்க வந்த தம்பதியின் பண்பு நலன்<br>பாபுவின் கருணை<br>முடிவுரை<br>( இது போன்ற கருத்துக்கள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் ) | **6** |
| | **( அல்லது )** | |
| | ஆ ) உரிமைத்தாகம் –பூமணி<br>முன்னுரை<br>கதை மாந்தர்கள்<br>இரண்டு சகோதரர்கள்<br>தம்பி வெள்ளைச்சாமி கடன் வாங்குதல்<br>முத்தையன் பங்காருசாமியின் வீட்டுக்குச் செல்லுதல்<br>ஒன்றிணையாமல் இருந்திருந்தால் . . . .<br>ஒற்றுமையின் வலிமை<br>முடிவுரை<br>(இக்கதையை சொந்த நடையில் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | **6** |

**பகுதி – V**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக .** **4 +2 = 6**

| | | |
|---|---|---|
| **47** | **அ ) தண்டியலங்காரம்**<br><br>ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி<br>ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்<br>மின்னோர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது<br>தன்னேர் இலாத தமிழ் !<br>– தண்டி | **4** |
| | **ஆ ) திருக்குறள்**<br><br>மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய<br>பிறத்தல் அதனான் வரும்.<br>– திருவள்ளுவர் | **2** |